(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
11 சைவசமய பாடப்பரீட்சை : 2021
தரம் பதினொன்று

nselva.com



கால அளவு	3.00 மணி
புள்ளிகள் : 100	

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. "அஞ்சுவது அஞ்சாமை பேதை" என்று கூறியவர் யார்?
   1) திருவள்ளுவர் 2) திருமூலர் 3) ராமகிருஷ்ணர் 4) தாயுமானவர்
2. தனி மனிதருக்கன்றி சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச் செயல் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) ஈகை 2) ஒப்புரவு 3) ஒழுக்கம்பேணல் 4) அன்பு பாராட்டல்
3. தற்போதைய நமது ஆண்டுகணிப்பீடு எதை அடிப்படையாகக் கொண்டது?
   1) பஞ்சாங்கம் 2) சந்திரன் 3) சூரியன் 4) நட்சத்திரம்
4. சந்திரன் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடுவது எது?
   1) கரணம் 2) யோகம் 3) ராசி 4) திதி
5. பின்வருவனவற்றுள் கடவுளை விதிப்படி மெய் அன்போடு வழிபடுதலில் கட்டுப்படுத்தலில் அடங்காதது எது?
   1) மனம் 2) வாக்கு 3) ஞானம் 4) காயம்
6. சிவனுக்குரிய நட்சத்திரம் எது?
   1) கார்த்திகை 2) திருவாதிரை 3) பூசம் 4) உத்தரம்
7. கார்த்திகை மாதப் பூரணை அன்று அனுட்டிக்கப்படும் நிகழ்வு எது?
   1) விளக்கீடு 2) தீபாவளி
   3) திருவெம்பாவை 4) ஆருத்திரா தரிசனம்
8. எக்கடவுளின் கண்களில் இருந்து சிந்திய மணி உருத்திராக்கம் என அழைக்கப்படுகிறது?
   1) விஷ்ணு 2) பிரம்மா 3) சிவன் 4) சண்டேஸ்வரர்
9. பூதவுடல் தகனம் செய்யப்பட்ட சாம்பலை விதிமுறைப்படி புண்ணிய நீர்நிலையில் கரைத்துவிடும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?
   1) சிரார்த்தம் 2) திவசம் 3) அஸ்தி சஞ்சயணம் 4) அந்தியேஷ்டி
10. வைணவருக்குரிய ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
    1) பஞ்சராத்திரம் 2) தந்திரங்கள் 3) சிவாகமம் 4) அதர்வனம்
11. சீதை மேல் காமுற்ற சயந்தன், காக உருவில் வந்த போது அக்காகத்தின் ஒரு கண்ணைக் குருடாக்கியவர் யார்?
    1) இராமன் 2) விநாயகர் 3) முருகன் 4) இலக்குமணன்

12. “ஆத்தாளை எங்கள் அபிராமி வள்ளியை .....” என்ற பாசுரத்தைப் பாடியவர் யார்?
    1) தொண்டரடிப் பொடியாழ்வார் 2) நம்மாழ்வார்
    3) அபிராமிப்பட்டர் 4) ஆண்டாள்
13. முருகப்பெருமானின் படைத்தலைவர் யார்?
    1) வீரவாகுத்தேவர் 2) சயந்தன் 3) இந்திரன் 4) சமூர்த்திராஜன்
14. குங்கிலியக்கலய நாயனார் எந்நெறி நின்று இறைபணி செய்தார்?
    1) கிரியை 2) சரியை 3) யோகம் 4) ஞானம்
15. பெருஞ்சாந்தி என அழைக்கப்படும் கிரியை யாது?
    1) தேர்திருவிழா 2) தீர்த்தோற்சவம்
    3) விக்கிரபிரதிஷ்டை 4) திருக்குடமுழுக்கு
16. சுந்தரரின் இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை வழங்கி வந்தவர் யார்?
    1) தில்லைவாழ் அந்தணர் 2) குண்டையூர்கிழார்
    3) சடையனார் 4) சேரமான் பெருமாள்
17. மன்னர் விரும்பிய குதிரைகள் எல்லாம் எத்தினத்தில் வந்தடையும் என மாணிக்கவாசகர் கூறினார்?
    1) ஆவணி மூலம் 2) சித்திரைசதயம் 3) மார்கழி திருவாதிரை 4) தைப்பூசம்
18. அருணந்தி சிவாச்சாரியரின் தலைமாணாக்கர் யார்?
    1) நமசிவாய தேசிகர் 2) உமாபதி சிவாச்சாரியார்
    3) மெய்கண்ட தேவர் 4) மறைஞான சம்பந்தர்
19. அநுபூதி என்பது சுட்டி நிற்கும் கருத்து யாது?
    1) சமய மரபின் முக்கியத்துவத்தைச் சுட்டுவது.
    2) பக்தி அநுபவ பூரிப்பைச் சுட்டுவது.
    3) மோட்ச அநுபவ பூரிப்பைச் சுட்டுவது.
    4) இறை அலங்காரங்களில் பூரிப்பைச் சுட்டுவது.
20. தமிழ்வசன நடையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
    1) ஆறுமுகநாவலர் 2) விபுலானந்தர்
    3) சேனாதிராய முதலியார் 4) வீரமாமுனிவர்
21. பயனை அனுபவிக்காமல் எஞ்சி இருக்கும் வினை எவ்வாறு அழைக்கப்படும்?
    1) ஆகாமியம் 2) பிரார்த்தம் 3) சஞ்சிதம் 4) நிஷ்காமியம்
22. “ஞான மிவனொழிய நண்ணியிடு நற்கலனால் பானு வொழியப் படின்” என்பதில் ‘பானு’ என்பது யாது?
    1) சூரியன் 2) மழை 3) சந்திரன் 4) இந்திரன்
23. சாம்பவ தீட்சை என்பது யாது?
    1) அருள் நோக்கம் அளிக்கும் தீட்சை.
    2) சொற்களால் உபதேசிக்கும் தீட்சை.
    3) கையால் தீண்டும் தீட்சை.
    4) மாணாக்கனின் பாசத்தை அழிக்கும் தீட்சை.
24. சிலப்பதிகாரக் காவியத்தைப் பாடியவர் யார்?
    1) வீரக்கவிராயர் 2) சீத்தலை சாத்தனார்
    3) புகழேந்திபுலவர் 4) இளங்கோவடிகள்
25. இலங்கையைச் சிவபூமி என சிறப்பித்துக் கூறியவர் யார்?
    1) நாவலர் 2) திருமூலர் 3) அருணகிரிநாதர் 4) சுந்தரர்

26. அநுராதபுரத்தில் இராசதானியை நிர்மாணிக்கும் போது சிவன் கோயிலை நிறுவிய மன்னன் யார்?

1) அபயன் 2) பண்டுவாசுதேவன் 3) பண்டுகாபயன் 4) எல்லாளன்

27. மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மூலவராக உள்ள தெய்வம் எது?

1) பிள்ளையார் 2) சிவலிங்கம் 3) விஷ்ணு 4) முருகன்

28. இலங்கையின் ஆதிகுடிகளான நாகர்களின் தலையாய வழிபாட்டுத் தலமாக விளங்கிய ஆலயம் எது?

1) திருகோணேஸ்வரம் 2) முன்னேஸ்வரம் 3) நகுலேஸ்வரம் 4) திருக்கேதீச்சரம்

29. கண்ணகி மதுரையை எரித்த பின்னர் இலங்கைக்கு வந்து தங்கிய பத்தாவது இடம் எது?

1) வற்றாப்பளை 2) மாத்தளை 3) பாண்டிருப்பு 4) மட்டுவில்

30. நிலையான கொடி தம்பம் இன்றி கொக்கட்டி மரத்திலான நேரிய தடி ஒன்றினால் கொடிமரம் வைத்து வழிபடும் ஆலயம் எது?

1) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் 2) செல்வச்சந்நிதி கந்தசுவாமி கோயில்
3) கதிர்காமம் கந்தசுவாமி கோயில் 4) மண்டூர் கந்தசாமி கோயில்

31. பின்வருவனவற்றுள் தலவிருட்சமாக "நொச்சிமரம்" விளங்கும் ஆலயம் எது?

1) இணுவில் கந்தசுவாமி கோயில் 2) வெருகல் கந்தசுவாமி கோயில்
3) மண்டூர் கந்தசுவாமி கோயில் 4) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

32. பரவையாரின் சினத்தை அடக்க சுந்தரர் யாரைத் தூது அனுப்பினார்?

1) சங்கிலியார் 2) தில்லை வாழ் அந்தணர்கள்
3) சிவபெருமான் 4) சேரமான் பெருமாள்

33 - 35 வரை பின்வரும் அட்டவணையில் A-I வரை தரப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு கீழ்வினவப்பட்ட வினாவுக்குச் சரியான விடையைத் தருக.

சைவம் சார்ந்த சான்றோர்	வாழ்வியல் சம்பவம்	முத்தியடைந்தது
A) மறைஞான சம்பந்தர்	D) புடைவை நெய்பவரிடம் கூழ் வாங்கி குடித்தமை	G) ஆனி உத்தரம்
B) மாணிக்க வாசகர்	E) திருக்காளஞ்சேரியில் மௌன விரதம் இருந்தமை	H) சித்திரை அந்தம்
C) உமாபதிசிவாச்சாரியார்	F) அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சர்	I) ஆனிமகம்

33. வாதவூரர் என போற்றப்படுபவரோடு தொடர்புடைய தொகுதி?

1) AEG 2) AFH 3) BDI 4) BFI

34. "பட்டகட்டையில் பகற்குருடு போகிறது....." என்ற கூற்றை கூறியவரோடு தொடர்புடைய தொகுதி?

1) BDI 2) AEG 3) CFH 4) CEG

35. கொடிக்கவி பாடியவரோடு தொடர்புடைய தொகுதி.

1) CDH 2) CFH 3) AEG 4) BFI

36. "திகடசக்கர..." என்ற பாடலடியைக் கச்சியப்பருக்கு எடுத்துக் கொடுத்தவர் யார்?

1) அருணகிரிநாதர் 2) திருமூலர் 3) முருகன் 4) சயந்தன்

37. பகவத்கீதை யாரால் யாருக்கு உபதேசிக்கப்பட்டது.

1) இராமகிருஷ்ணன் - விவேகானந்தர் 2) கிருஷ்ணன் - அர்ஜுனன்
3) மறைஞான சம்பந்தர் - உமாபதிசிவாச்சாரியர் 4) விநாயகர் - வியாசர்

38. அன்னதானக் கந்தன் எனச் சிறப்பிக்கப்படும் முருகன் கோயில் எது?
    1) மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் 2) கதிர்காம கந்தன் ஆலயம்
    3) நல்லூர் கந்தசாமி கோவில் 4) செல்வசந்நிதி முருகன் ஆலயம்
39. உயிர்களின் பாவப்புண்ணியங்களைக் கணக்கிடும் பணியைச் சிவபெருமான் யாரிடம் ஒப்படைத்துள்ளார்?
    1) எமதர்மராஜன் 2) சித்திரபுத்திரன் 3) பிரம்மா 4) மார்க்கண்டேயர்
40. சைவ பரிபாலன சபையினரால் நாவலர் ஆச்சிரமம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
    1) 1954 2) 1948 3) 1945 4) 1950

(40 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எந்தத் திக்குகளிலே கால்நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது?
2. சந்திரன் வளரும் காலம் எவ்வாறு அழைக்கப்படும்?
3. இந்தியாவில் உள்ள அக்கினித்தலம் அமைந்துள்ள இடம் எது?
4. நாடோறும் நியமமாக எந்த நேரத்தில் நித்திரை விட்டெழுதல் வேண்டும்?
5. "நீறில்லா நெற்றி பாழ்" என்று கூறியவர் யார்?
6. சூக்கும பஞ்சாட்சர மந்திரம் எது?
7. சிவாகங்கள் எத்தனை வகைப்படும்?
8. சகலகலாவல்லிமாலை பாடியவர் யார்?

(8 x 2 = 16 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "தனம் தரும் கல்வி தரும் ....."
2. "ஆத்தாளை எங்கள் ....."
3. "உம்பர் தருத்தேனு ....."
4. "மூவிரு முகங்கள் போற்றி ....."
5. "உண்ணும் சோறு பருகும் ....."

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. "இலனென்னும் எவ்வம் ....."
2. "ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் ....."
3. "மறந்தும் பிறன்கேடு ....."
4. "திறனல்ல தற்பிறர் ....."
5. "ஏதிலார் குற்றம்போல் ....."

(5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு அடியேன் ...."

அ. சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாடிய சந்தர்ப்பத்தை விளக்குக.

ஆ. சுந்தரருக்காக இறைவன் நிகழ்த்திய இரண்டு அற்புதங்களைத் தருக?

இ. சுந்தரர் ஈழத்தின் எத்திருத்தலம் மீது தேவாரத்தை, எங்கிருந்து பாடினார்?

(10 புள்ளிகள்**)**

2. "சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளை உண்மை பொருளாகக் கூறுகிறது"

அ. பாசம் எத்தனை வகைப்படும் அவை எவை?

ஆ. ஆணவம் காரணமாக ஆன்மாவில் உண்டாகும் தீய குணங்கள் எவை?

இ. நல்வினை, தீவினை என்பவற்றுள் அடங்குபவையில் மூன்று வினைகளைக் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்**)**

3. "சைவ சமயத்தின் ஆன்ம விடுதலைக்கான ஒருவழி தீட்சை ஆகும்"

அ. சமய தீட்சை பெற்றவர் பேண வேண்டிய நித்திய அநுட்டானங்கள் எவை?

ஆ. சாதார தீட்சை யாருக்கு அளிக்கப்படும்? இத்தீட்சையில் அடங்கும் ஏதாவது 3 வகை தீட்சைகளைக் குறிப்பிடுக?

இ. சைவ நாற்பாதங்கள் எவை? இந்நாற்பாதங்களைக் கடைபிடிப்போர் பெறும் முத்திவகைகளையும் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்**)**

4. "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விட்டுச்சென்ற பணியைச் சைவ பரிபாலன சபை தொடர்கிறது"

அ. இச்சபையின் நோக்கங்கள் மூன்று தருக?

ஆ. இச்சபை வெளியிட்ட நூல்கள் மூன்று தருக?

இ. இச்சபை மேற்கொண்டு வரும் மூன்று பணிகளைத் தருக?

(10 புள்ளிகள்**)**

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

அ. கும்பாபிஷேகம் ஆ. நாகதம்பிரான் வழிபாடு

இ. பஞ்சாட்சரம் ஈ. பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்

உ. அருணகிரிநாதர்

(10 புள்ளிகள்**)**